REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'ஒதுக்கப்பட்ட மக்களின் இழிநிலை மாற ஆவன செய்வோம்!'

"மனித வர்க்கத்தில் பெரும் பகுதியினர் தம்முடைய இயற்கையான வளர்ச்சி தடுக்கப்பட்டும், உடல் நலம்—ஆன்மீக வாழ்க்கை—அறிவு வளர்ச்சி—இவை போன்ற யாவற்றிலும் ஒடுக்கப்பட்டுமிருக்கும் இழிநிலை மாறி, மனிதன் ஒவ்வொருவனும், தனது இயற்கையான உணர்வை அடைய வேண்டுமானுல் ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் தம்மிடையே ஒற்றுமையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். இதை நாம் எப்போதுமே நமது மனத்திலிறுத்திக்கொள்ள வேண்டும்."

—ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் டாக்டர் சுகர்னே.

மலர் 2] சென்னை: சித்திரை 6உ செவ்வாய் (19—4—55) ★ ★ வெளியூர்: சித்திரை 7உ புதன் (20—4—55) [இதழ் 263

'மதம் மாறியும் கொடுமை குறையவில்லை!'

'எல்லா மதங்களிலும் ஏற்றமும்—தாழ்வும் இருக்கின்றன'

'உயர்ந்தோர், காலத்தோடு ஒட்டி வாழ வேண்டும்'

'பொருளாதார முன்னேற்றம் மட்டும் தாழ்த்தப்பட்டோர் உயர்ந்துவிட வழியாகாது'

மத்திய மந்திரி ஜெகஜீவன்ராம் விளக்கம்

ஜாம்புசார், ஏப். 17—

"தாழ்த்தப்பட்ட மக்கள், என்றும் பின்தள்ளப்படுகிற நிலையிலேயே இருக்க முடியாது; முன்னேறியுள்ள சமூகத்தினர் காலப் போக்கை அனுசரித்து, படுபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள், அவர்களுக்குரிய இடத்தைப் பெற்று உயருமாறு செய்ய வேண்டும்;

"ஆண்டாண்டுக் காலமாகத் தாழ்த்தப்பட்ட நிலையிலிருப்போர் உயருவதற்கெனக் கூறி, பலப் பல மதங்கள் முயன்றிருக்கின்றன; ஆனுல், மதம் மாறிய பின்னரும், தாழ்த்தப்பட்ட அந்த மக்களின் நிலை அப்படியே இருக்கின்றது—கிஞ்சிற்றும் உயர்ந்தபாடில்லை; ஒரு வகுப்புப் போராட்டம் வேண்டுமென்பது எவருக்கும் நல்லதல்ல ஆனுல், தாழ்த்தப்பட்டவர்கள் முடிவேதுமின்றி பின்தங்கிய நிலையிலேயே வைக்கப்பட்டிருக்க முடியாது;

"ஒரு மதத்தில் தங்கட்கு இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கெனக் கூறி வேறு மதத்தைத் தழுவியவர்கள், அங்கும் அதே கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர்;

"இன்று இஸ்லாம், கிறித்துவ, சீக்கிய, இந்து ஆகிய எல்லா மதங்களிலும், 'தாழ்த்தப்பட்டவர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள்,' என்ற வேறுபாடுகளுடன் இருக்கத்தான் செய்கிருர்கள்; எனவே, 'உயர்ந்தவர்கள்' என்றெண்ணிடுவோர், காலத்தின் வேகமான ஓட்டத்தை அனுசரித்து, 'எல்லோரும் மக்களே; எல்லோரும் ஓர் குலத்தவரே,' என்ற எண்ணங் கொண்டவர்களாக வேண்டும்,"

—என்று மத்திய அரசாங்க செய்திப் போக்குவரத்து மந்திரி ஜெகஜீவன்ராம், குஜராத் தாழ்த்தப்பட்டோர் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் பேசுகையில், 'தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும்' என்பதற்கு இன்று நாட்டில் எதிர்ப்புக் குறைந்து விட்டது. என்ருலும், அந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பதில் ஒத்துழைப்பு இல்லை.

"சகோதர பாவத்துடன், தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் மக்களுடன் ஒன்றிப் பழகி, அவர்களும் தங்களைப்போல முன்னேற வேண்டும் என்ற எண்ணம் எல்லா மக்களிடத்திலும் உதயமாகி விடவில்லை.

"இந்த எண்ணம் மலராதவரை—நிலை மாருதவரை, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் வெகு தாமதமாகும்.

"கக்கூஸ் சுத்தம் செய்வது, தெருக் கூட்டுவது போன்ற வேலைகளை சமூகத்தில் ஒரு பகுதியினர் மட்டுமே செய்ய வேண்டுமென்று கூறும் ஒரு சமூக அமைப்பு முறை, இந்த நாட்டில் இனி இடம்பெற முடியாது.

"பொருளாதார முன்னேற்றம் மட்டும் சமூகத்தில் அத்தகைய வேலை செய்வோரின் நிலையை உயர்த்திவிட முடியாது; 'இந்த வேலை செய்வதற்கு இவர்கள்தான்,' என்று நிர்ணயிக்கும் முறை ஒழிக்கப்பட்டாக வேண்டும்; அதுதான் பிரச்சினைக்கான பரிகாரமாகும்."

போப்: வாத நோயால் வலக்கரமிழப்பாராம்!

வாடிசன்சிடி, ஏப். 18—

கத்தோலிக்க மதத் தலைவர் போப்பிற்கு வயது முதிர்ச்சியினுல் ஏற்பட்டுள்ள வாத நோய் காரணமாக, இனி அவரது வலக்கரம் உபயோகமற்றுப் போய் விடும் என்று கருதப்படுகிறது.

'எக்ஸ்ரே' படம் பிடித்துப் பார்த்த பின் டாக்டர்கள் இந்த முடிவுக்கு வந்தனர் எனத் தெரிகிறது. போப்பிற்கு இப்போது 99 வயதாகிறதாம்.

இந்தியாவில், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 1954-டிசம்பர் இறுதிவரை, 11,836-மைலுக்குச் சாதாரண பாதைகளும், 1,145 மைலுக்குக் கெட்டிப் படுத்தப்பட்ட பாதைகளும் அமைக்கப்பட்டன.

ஹங்கேரி பிரதமர் பதவி நீக்கம்!

புது பிரதமர் உடன் நியமனம்

வியன்னு, ஏப். 18—

சோவியத் ரஷ்யாவின் நேச நாடான ஹங்கேரியின் பிரதமராக இருந்துவந்த ஆண்ட்ராஸ் நாகி என்பவர் பதவியிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டிருக்கிருர். அது தவிர, கம்யூனிஸ்டு கட்சியின் தலைமைக் குழுவிலிருந்தும் அவர் நீக்கப்பட்டுவிட்டார் என்று செய்தி ஒன்று அறிவிக்கிறது.

இவரைத் தொடர்ந்து கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளர், அரசியல் குழு உறுப்பினர் ஆகிய இரு பதவிகளிலிருந்தும் மிகாலே பார்காஸ் என்பவரும் நீக்கப்பட்டு விட்டாராம்.

இவர்களின் பதவி நீக்கத்தை யொட்டி, இதுவரை முதல் உதவிப் பிரதமராக இருந்துவந்த ஹெகேட் டியூஸ் என்பவர் பிரதமராகவும், தொழிற் கட்சித் தலைவராக இருந்த ஜோசப் மெக்கீஸ் என்பவர் முதல் உதவிப் பிரதமராகவும் நியமனம் பெற்றுள்ளனராம்.

டீ அருந்துதல், புகை பிடித்தலுக்கு எதிராக 'யுத்தப் பிரகடனம்!'

சௌராஷ்டிர கிராமப் பஞ்சாயத்து மாநாட்டில் தீர்மானம்

சுரேந்திர நகர், ஏப். 17—

சௌராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த 80 சத விகித கிராமங்களின் பிரதிநிதிகளாக, 5,000 பேர்களும், பார்வையாளர்களாக 20,000 மக்களும் கூடியிருந்த சௌராஷ்டிர மாநில கிராமப் பஞ்சாயத்து மாநாடு ஒன்றில், மக்களின் செல்வத்தையும் வீணுக்கி, உடல் நலத்தையும் பாழாக்குகிற 'டீ' அருந்தும் வழக்கத்தையும், புகை பிடிக்கும் பழக்கத்தையும் மக்கள் ஒழித்துவிட வேண்டும் என்று தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ளது.

மாநாட்டை காங்கிரஸ் முன்னுள் செயலாளர் பல்வந்த்ராய் மேத்தா திறந்து வைத்தார்.

தேபர் உட்பட பல காங்கிரஸ் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

நிறைவேற்றப்பட்ட பல்வேறு தீர்மானங்களில், டீ அருந்துவதையும், புகை பிடிப்பதையும் ஒழிப்பதற்கு, மக்கள், அந்தப் பழக்கங்களுக்கு எதிராகப் 'போர் தொடுக்க வேண்டும்,' என்று கோரப்பட்டுள்ள தீர்மானமே முக்கியமானதெனக் கருதப்படுகிறதாம்.

சட்டசபை முன் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

சபை ஒத்திவைக்கப்பட்டது!

புவனேஸ்வரம், ஏப். 17—

ஒரிசா சட்டசபை முன்பு, பாரக்கண்டித் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனை ஒட்டி, பாய்ஷ்ஜட் பட்நாயக் என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர், சட்டசபைத் தலைவரிடம், 'சபையை ஒத்திவைக்க வேண்டும் அல்லது தொழிலாளர் மந்திரி சென்று தொழிலாளர்களைச் சந்திக்க வேண்டும்,' என்று கோரினுர்.

தலைவர், 'சபையின் முன் உள்ள ஒரிசா அத்தியாவசியப் பொருள்கள் கட்டுப்பாடு மசோதா மீது நடைபெறும் விவாதம் முடிந்தபின்தான் சபை ஒத்திவைக்கப்பட முடியும்,' என்று கூறிவிட்டார்.

என்ருலும், பட்நாயக் தமது இடத்தில் உட்கார்ந்து கொள்ளாமல், கிருபாநிதி நாயக் என்ற உதவி மந்திரியை விவாதத்திற்குப் பதிலளிக்க முடியாமல் தடுத்துக் கொண்டிருந்தாராம்.

நடவடிக்கைகள் நின்று போனதால், தலைவர், பட்நாயக் என்ற அந்த கம்யூனிஸ்டு உறுப்பினரை உட்காருமாறு கோரினுர்; என்ருலும், உறுப்பினர் உட்கார மறுத்துவிட்டிருக்கிருர்.

பிறகு, 'விவாதத்திற்குப் பதிலளிக்க எவ்வளவு நேரம் ஆகும்?' என்று உதவி மந்திரியை தலைவர் கேட்டபோது, '10 நிமிடம் ஆகும்,' என்று அவர் பதிலளித்தார்.

உடனே பட்நாயக், தனது இடத்தில் அமர்ந்து கொண்டாராம். பிறகு மந்திரி பதிலளித்ததும் சபை அத்துடன் ஒத்திவைக்கப்பட்டதாம்.

சபைக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்திய தொழிலாளர்கள், 'வேலையிலிருந்து நீக்கப்பட்ட 50-தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை தரவேண்டும்,' என்றும், விடுமுறை, அதிக வேலைக்கான சம்பளம் இவற்றில் தங்களுக்குள்ள குறைகளைப் போக்கவும், நிர்வாகத்தில் சர்க்கார் தலையிட்டு நியாயம் பெற்றுத் தர வேண்டும்,' என்றும் கோரினர் எனத் தெரிகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—11/55

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்ட அழைப்பு

★

அன்புடையீர்!

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் 24—4—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, சென்னை, வண்ணுரப்பேட்டை, தியாகராயர் கல்லூரியில் நடைபெறும்.

அதுபோது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

பொருள்:—

1. பொதுச்செயலாளர் தேர்தல்
2. மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைத்தல்

அன்பன்,

"அறிவகம்" சென்னை, 14—4—55

சி. என். அண்ணுதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

விஞ்ஞான மேதை ஈன்ஸ்டின் மறைவு

அணுவின் ஆற்றல் கண்டவர்

பிரின்ஸ்டன் (நியூ ஜேர்சி) ஏப். 18—

பிரபல விஞ்ஞான மேதையான டாக்டர் ஆல்பர்ட் ஈன்ஸ்டின் தமது 76-வது வயதில் இன்று காலமானுர்.

இவரது விஞ்ஞான அறிவு உலகறிந்த ஒன்று. 'அணுவைப் பிளந்தால் அதற்கு மகத்தான பேராற்றல் உண்டு,' என்று கண்டறிந்து கூறிய பேரறிவாளர் ஈன்ஸ்டின்.

நவீன கால விஞ்ஞான வளர்ச்சிக்கு, அவரது தெளிவான சிந்தனை, ஓர் தூண்டுகோலாய் விளங்கியது.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
திமுகத்தின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 19—4—'55 செவ்வாய்

ஊற்றுக்கால் தெரிகிறதா ?

" 'எல்லோரும் ஒன்று' என்றெண்ண முடியாது, மக்களைத் தடுத்து நிறுத்தும் சாதிப் பிரிவினைகள் ஒழிக்கப்பட வேண்டும்." என்று கடந்த சமீப காலத்தில் கூறுதவர் கிடையாது.

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடினார் பாரதி!

'சாதி இருக்கிறது என்பானும் இருக்கின்றானே,' என்று முழங்கினர் பாரதிதாசன்!

பண்டிதர் பேசியிருக்கிறார் அன்று—இன்றும் பேசுகிறார்—வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம்!

'சாதிகள் கூடாது,' என்று கூறுதவர், 'முற்போக்காளர்' என்று கருதப்படமாட்டார்கள் என்ற நிலை நாட்டில் வளர்ந்தாகிவிட்டது.

'சாதிகள் ஒழிந்தாகவேண்டும்,' என்ற எண்ணம் மலர்ந்து வருகிறது.

ஆனால்......

சாதிகள் ஒழியவேண்டும் என்று மட்டும் கூறுபவர்கள், கடந்த காலத்திலும் சரி, இன்றும் சரி, சாதிமுறையின் ஊற்றுக்கால் எது என்பதை அறிந்துகொள்ள, சற்று திரும்பிப்பார்க்க மறுத்தே வந்திருக்கிறார்கள்.

'சாதி முறை எப்படியோ வந்துவிட்டது; அது ஆகாது—கூடாது,' என்ற அளவில்தான் கூறுவர்; 'ஒழிக்கத் திட்டம் வேண்டும்—சட்டம் வேண்டும்,' என்பர்: ஆனால், சாதி முறை எப்படி வந்தது?—காண மறுப்பர்; கண்டு கூற முற்படுவோரை முறைப்பர்.

சாதி முறையால் வந்துற்ற கேடுகளை, சாதிமுறை வளர்க்கப்படும் 'பண்ணை வீடு'களை ஏடுகளில் எழுதினால், குற்றப் பட்டியல் தயாரிப்பர்; ஆனாலும், 'சாதிமுறை ஒழிய வேண்டும்,' என்பர்.

திராவிடர் இயக்கத்தின் நீங்காப் பணியாக 'சாதி ஒழிப்பு' இருந்து வருவதால்தான், தென்னாட்டில், இன்று, மக்களில் குறிப்பிடத்தகுந்த அளவினரேனும், 'நான் இன்ன சாதியினன்' என்று கூறிக்கொள்ள வெட்கப்படுகிற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து செல்லும் இயக்கப்பணி, படர்ந்த அளவுக்கு அந்த நிலையை நிச்சயமாகத் தென்னாட்டில் வளர்த்தே தீரும்.

'சாதி முறை ஒழிய வேண்டும்,' என்று கூறுவோர் தொகை வளர்ந்திருந்தாலும் கூட, சாதி முறை ஒழிக்கப்படுவதற்கான வழிகளில் எது உண்மையானது பலன் தரத்தக்கது என்பதை உணர்ந்துள்ளோர் தொகை குறைவுதான்.

சாதி முறைகள், 'வருணாச்சிரம தருமத்'தின் விளைவு!

"வருணாச்சிரம தருமம், பார்ப்பனரின் சுரண்டல் இயந்திரம்," என்பதை நாம் மட்டும்தான் இந்த நாட்டில், மேலைநாட்டு அறிஞர்கள் பலர் தந்த வரலாற்றுச் சுவடிகளின் துணை கொண்டு எடுத்து விளக்கி வந்தோம்.

'ஆரியமாயை என்ற தாசி, இந்த நாட்டு மக்களுக்குத் தந்த பலப்பல மயக்க 'மருந்து'களின் மிகக் கொடிய விளைவுகளுள், சாதிச் சனியனும் ஒன்று,' என்று ஆதாரங்களுடன் விளக்கி வந்திருக்கிறோம்.

ஆபி டூபே முதல் கன்னிமேயோ வரை, கார்ல் மார்க்ஸ் முதல் கால்டுவெல் வரை, ஆரியத்தின்—பார்ப்பனீயத்தின் நச்சுத்தன்மை குறித்துக் கூறியவற்றை எல்லாம் தொகுத்து, அவற்றின் நியாய—அநியாயங்களைப் பகுத்து, எஞ்சியவற்றை நடைமுறை கொண்டு வகுத்து, உண்மைகளை மட்டும் வடித்தெடுத்துக் கூறியிருக்கிறோம்—'ஆரியம் ஓர் நடமாடும் நாசம்; வேண்டாம் மக்களுக்கு அதனிடம் பாசம்,' என்று!

ஆனால், அதற்கு அப்போது கிடைத்த பரிசு, நாடு அறிந்ததே!

'பார்ப்பனீயம் தான், நாட்டில் நிலவும் சாதிப் பாகுபாடுகள் முதலிய கேடுகளுக்குக் காரணம்-ஊற்றுக்கால்' என்று நாம் கூறியபோது, அதை ஏற்றுக் கொள்ள மறுத்தே வந்தனர்.

பார்ப்பனியக் கொடுமைகளால் படுபாதாளத்திற்குத் தள்ளப்பட்ட தாழ்த்தப்பட்டோரில் விஷயமறிந்த பலர் கூட, உண்மையை உணர்ந்திருந்தாலும் வெளிப்படையாகக் கூறத் தயங்கியே வந்தனர்—வருகின்றனர்.

அத்திபூத்தாற்போல், சென்ற வாரம் மக்கள் சபையில், 'பார்ப்பனர்கள்தான் சாதி முறைக்குக் காரணவான்கள்,' என்று ஒரு தாழ்த்தப்பட்ட உறுப்பினர் முழங்கியிருக்கிறார்.

மைசூரைச் சேர்ந்த அவர், 'வெறும சட்டங்களால் மட்டுமே சாதிமுறைகள் ஒழிக்கப்பட முடியாது; மக்கள் மனம் திருந்தியாக வேண்டும்,' என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஊறிப்போயிருக்கிற ஆரிய மாயை, மக்கள் உள்ளத்திலிருந்து அகன்றாலன்றி, 'எல்லோரும் ஒன்று,' என்றெண்ணும் உயர் எண்ணம், அவர்களிடத்தில் உதயமாக முடியாது.

'சாதிப் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் கூடாது,' என்று கூறி சட்டமியற்றிவிடுவதினால் மட்டுமே, சாதி முறை ஒழிந்துவிடாது.

சாதி முறை போன்ற எத்தனையோ தேவையற்ற—மனித இன உயர் உள்ளத்தில் இடம் பெறக் கூடாத—பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட மூடப் பழக்கங்கள் போன்ற கேடுகளுக்கு ஊற்றுக்காலாய் விளங்கும் 'பார்ப்பனீயம்' ஒழிய வேண்டும்—ஒழிக்கப்பட வேண்டும்.

சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் ஆகியவற்றின்கீழ் 1954-ம் ஆண்டு இறுதிவரை, பொதுமக்கள் ரொக்கமாகவும், உழைப்பு மூலமும், பொருளாகவும் மொத்தம் சுமார் ரூ. 7,48,00,000 அளித்தனர்; அதே காலத்தில் சர்க்கார் செலவழித்த தொகை மொத்தம் ரூ. 13,48,00,000 ஆகும்.

காங்கிரசாருக்கு

'யோக்கியதாம்சம்' நிர்ணயம்

அடுத்த பொதுத் தேர்தலுக்கு நிற்கப்போகும் காங்கிரஸ் அபேட்சகர்களின் யோக்கியதாம்சங்களை நிர்ணயிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் மாதவன் நாயர் கூறியிருக்கிறார்.

சென்ற பொதுத்தேர்தலில் அபேட்சகர்களைப் பொறுக்குவதில் கஷ்டம் இருந்தது என்றும் தெரிவித்தார்.

அடுத்த பொதுத் தேர்தலுக்கு அதிக எண்ணிக்கையில் பெண் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

வேலை தேடுவோர் எண்ணிக்கை குறைந்தது!

மக்கள் சபையில் தகவல்

"வேலை தேடித்தரும் நிறுவனங்களில், வேலைக்காகப் பதிவு செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை, 1954 டிசம்பரில் 6,09,780 ஆக இருந்தது, பிப்ரவரியில் 6,05,933 ஆகக் குறைந்துவிட்டது 1955-ம் ஆண்டு முதல் இரு மாதங்களில் 21,242 வேலைகள் காலியாக இருப்பதாக சர்க்கார் அறிவித்ததே இதற்குக் காரணமாகும்," என்று, மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

மானங் காத்த மங்கையர்!

'ருசிகரமான தகவல்!'

தஞ்சை—

" 'எதிரிகள் அரண்மனைக்குள் நுழைந்து விட்டார்கள்' என்ற தகவலை அறிந்ததும், சுமார் 700-க்கும் அதிகமான சுமங்கலிப் பெண்கள் தங்களை முழுவதும் அலங்கரித்துக்கொண்டு, தங்கள் கற்பையும், மானத்தையும் காப்பாற்றிக் கொள்ள தஞ்சை அரண்மனைக் குளத்தில் குதித்து மாண்டுவிட்டனர்; அந்தக் குளம் மூடப்பட்டு விட்டது; இப்போது அதைத் தோண்டிப் பார்த்தால் ஏராளமான பொருட்கள் கிடைக்கக்கூடும்," என்று, தஞ்சையில் நடைபெற்ற கலைக்கண் காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய ப. ச. வேங்கட கிருட்டிணன் என்பவர்கூறினார்.

சர்க்காரில் ஊழியம்

எந்த அளவுக்குக் கல்விப் பட்டம் தேவை?

ஆராய்ந்தறிய குழு நியமனம்

புதுடில்லி, ஏப். 16—

சர்க்கார் ஊழியத்திற்கென தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களின் தகுதிக்கு, எந்த அளவுக்குக் கல்விப்பட்டங்கள் தேவை என்பதைப் பரிசீலனை செய்து கண்டறிய இந்திய சர்க்கார், டாக்டர் ஏ இராமசாமி அவர்களின் தலைமையில் 10 பேரடங்கிய குழு ஒன்றை நியமித்திருக்கிறது. இந்தக் குழு, தனது சிபாரிசுகளை வருகிற ஆகஸ்டு திங்கள் இறுதிக்குள்ளாக தாக்கல் செய்துவிடவேண்டுமாம்.

இக்குழு, பல்கலைக் கழகப் பட்டங்கள் பெறுதவர்களுக்கு எவ்வித மான பரீட்சைகள் நடத்துவது என்பது பற்றி பரிசீலிப்பதுடன், சர்க்கார் ஊழியத்திற்கு அதிகமான பேர்கள் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியும் ஒரு முடிவு கட்டும் என்றும் கூறப்படுகிறது.

இந்திய ரயில்வேக்களின் நிர்வாகத்தின்கீழ் மொத்தம் 145 பள்ளிக்கூடங்கள் உள்ளன; அவற்றில் 94 ஆரம்பப் பள்ளிகளும், 27 நடுத்தரப் பள்ளிகளும், 24 உயர்தர, உயர்தர செகண்டரிப் பள்ளிகளும் ஆகும்.

கன ரக மின்சார இயந்திரத் தொழிற்சாலை

சென்னையில் நிறுவுமாறு மக்கள் சபை உறுப்பினர் கோரிக்கை

தென் மாநிலம் புறக்கணிக்கப்பட்டிருப்பதை அமைச்சர்களிடம் எடுத்துரைப்பர்களாம்!

கன ரக மின்சார இயந்திர உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவ இந்தியப் பேரரசு முடிவு செய்திருப்பதால், அந்தத் தொழிற்சாலையை சென்னை மாநிலத்தில் நிறுவ வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காக சென்னையைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்கள் தூது செல்லவிருக்கின்றனர் என்றும், சம்மந்தப்பட்ட அமைச்சர்களிடம் தருவதற்காக மனு ஒன்று தயாரித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

'அந்தத் தொழிற்சாலையை தென்னாட்டில் நிறுவ வேண்டும்,' என்ற கோரிக்கையை அரசாங்கம் சுலபத்தில் அலட்சியம் செய்துவிட முடியாது.

பொதுவாக, திரு—கோச்சி, மைசூர் ஆகிய மாநிலங்களில் ஒன்றிரண்டேனும் பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதர எல்லா பெரிய கன ரகத் தொழில்களும் வடநாட்டிலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

"சென்னை மாநிலத்தில்தான் மருந்துக்குக்கூட ஒரு பெரிய தொழிற்சாலை கிடையாது; குறிப்பாக, எஞ்சினியரிங் தொழில் துறையில் சென்னை மாநிலத்தில், தொழிற்சாலைகளே கிடையாது. இந்த உண்மை ஒர்புறம் இருக்கட்டும்; 'திட்டமிடப்பட்டுள்ள கன ரக மின்சார இயந்திரத் தொழிற்சாலைக்கு, சென்னைதான் எல்லா வகையிலும் ஏற்ற இடமாக இருக்க முடியும்," என்றெல்லாம் தங்கள் நியாயமான கோரிக்கையை நிலைநாட்ட காரணங்களைச் சேகரித்துக் கூறவிருக்கின்றனராம், சென்னை உறுப்பினர்கள்!

சென்னை மாநிலத்தில் எஞ்சினீயரிங் பயிற்சி பெற்றோரும், எல்லா வகையான தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றோரும் தேவைக்கு அதிகமாகவே இருக்கிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் சென்னையைப்போல் அத்தகைய தொழில் நுணுக்கக் கல்வி பெற்றோர் வேலையற்றிருக்கவில்லை.

மேலும், தொழிற்சாலைக்குத் தேவையான அபிரகம், ரப்பர், பட்டு, பருத்தி, எண்ணெய் முதலியன எப்போதும் சென்னையிலேயே கிடைக்கக்கூடியவையாகும்.

இறக்குமதி செய்யப்பட வேண்டிய அத்தியாவசியமான எல்லா பொருட்களும், சென்னை துறைமுகம் அருகிலிருப்பதால், வெகு சுலபமாக இறக்குமதி செய்யப்பட முடியும்.

மின்சார உற்பத்தியிலும் இந்திய மாநிலங்களுள், சென்னை மூன்றாவது இடம் பெற்றிருக்கிறது. பம்பாய், வங்கம் இரண்டும்தான் சென்னையைவிட அதிக உற்பத்தி செய்பவை.

இப்போது திட்டமிடப்படும் மின்சாரத் திட்டங்கள் பூர்த்தியாகிவிட்டால் சென்னை முதலிடம் கூடப் பெறமுடியும்.

மேலும் இந்தியாவில் வேறெந்த மாநிலத்தைக் காட்டிலும் சென்னையில்தான், கன ரகமின்சார இயந்திர சாதனங்களின் தேவை அதிகமிருக்கின்றன.

சென்னைக்கு, தொழில் மின்சார மோட்டார்கள் 50 குதிரை ஒட்டத்திற்குக் குறைவானவை 3000; 100 குதிரை ஓட்டத்திற்கு அதிகமானவை 80-ஆண்டுதோறும் தேவைப்படுகின்றன. இவை எல்லாம் இப்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

சென்னை, தனக்கு மிகப் பெரும் அளவு தேவையான மின்சார இயந்திரங்கள், பொருள்களை யெல்லாம் வெளிநாடுகளிலிருந்தோ, வெளி மாநிலங்களிலிருந்தோ இறக்குமதி செய்துகொள்ளவேண்டியுள்ளது. அதிகமான மின்சார உற்பத்தி, அதிகமான மின்சாரம் உபயோகிப்போர் கொண்டதுங் கூட சென்னைதான்!

இந்தக் காரணங்களால் சென்னையிலேயே அந்த கனரக மின்சார இயந்திரத் தொழிற்சாலையை நிறுவ வேண்டுமென சென்னை மக்கள் சபை உறுப்பினர்கள் கோருகின்றனராம்.

ஐதராபாத்தில் உர உற்பத்தித் தொழிற்சாலை

கோரிக்கைக்கு மத்திய மந்திரியின் மழுப்பல்

ஐதராபாத் மாநிலத்தில் ஒரு உர உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவ வேண்டுமென மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர் தூதுக் குழு ஒன்று மத்திய உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டியைக் கண்டு கேட்டபோது, அவர், உரத் தொழிற்சாலைக் குழு தன் அறிக்கையை தாக்கல் செய்த பிறகே, துவக்கப்படவிருக்கும் இரண்டு மூன்று உரத் தொழிற்சாலைகள் பற்றி முடிவு மேற்கொள்ளப்படும் என்று கூறினாராம்.

"வட நாட்டிலிருக்கும் நங்கல் திட்டத்துடன் இப்போது புதிதாக ஒரு உர உற்பத்தித் தொழிற்சாலை நறுவப்பட்டதே, அது எப்படி?" என்று கேட்கப்பட்டபோது, மத்திய மந்திரி கே. சி. ரெட்டி, உரத் தொழிற்சாலை குழு தாக்கல் செய்த இடைக்கால அறிக்கையின் பேரிலேயே அந்தத் தொழிற்சாலை உருப்பெற்றது என்றும், நங்கல் நீர்ப்பாசனத் திட்டத்துடன் இணைந்த ஒன்றாக, இந்த உர உற்பத்தித் தொழிற்சாலையும் இருந்ததால்தான் உரத் தொழிற்சாலைக் குழு, இடைக்கால அறிக்கை தந்தது என்றும் கூறியதாகத் தெரிய வருகிறது. 'ஐதராபாத் மாநிலத்தின் கோரிக்கை கவனிக்கப்படும்,' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சிறைச்சாலையே சிறந்ததாம்!

"தற்போதைய நாட்களில் சிறைச்சாலைகளில் நடைபெறும் கச்சேரிகளையும் நாடகங்களையும் பார்த்தால், நல்ல ஓய்வு எடுத்துக்கொள்ள சிறைக்கே வந்துவிடலாம் என்று எனக்குத் தோன்றுகிறது; சிறைக்குச் சென்றால், இருட்டறைகளில் பூட்டப்பட்டு அவதியுற வேண்டுமே என்ற கவலை இப்போது கிடையாது என்பதே இதற்குக் காரணம்,"

என்று, சென்னை மாநில நிதி அமைச்சர் சுப்பிரமணியம், வேலூரில், சென்னை மாநில பெண்கள் சிறையின் வெள்ளி விழாவிற்குத் தலைமையேற்றுப் பேசுகையில் கூறியிருக்கிறார்!

ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்த முடியாதாம்!

‘பணமில்லை’ என்ற பழைய பல்லவியையே பாடுகிறார் அமைச்சர்

வேலூர், ஏப். 6—

“ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துவது சாத்தியமில்லை; அவர்களுக்குச் சிறிதளவேனும் சம்பள உயர்வு தந்தாலும் அது சர்க்காருக்குப் பெருஞ்செலவை உண்டுபண்ணும்,” —என்று சென்னை கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

சுமார் ரூ. 60 ஆயிரம் செலவில் களம்பூர் மாவட்ட உயர்நிலைப் பள்ளிக்கான புதியதொரு பகுதிக் கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசிய அவர், கட்டிடத்திற்கான செலவுத் தொகையை அன்பளிப்பாகத் தந்துதவிய சிவனூர் சுப்பராயச் செட்டியார் என்பாரை வெகுவாகப் பாராட்டினார்.

“மக்கள் எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தை எதிர்பார்த்துக் கிடக்கக்கூடாது. தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ள வேண்டும்; பெரும் பணக்காரர்கள், சுப்பராயச் செட்டியார் காட்டிய உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும்,”

என்றும் உபதேசித்திருக்கிறார்.

இந்தியாவில் அடுத்த பொதுத் தேர்தல்

ஏக காலத்தில் இந்தியா முழுமையும் நடைபெறும்?

இப்போது திட்டமிடப்பட்டுள்ளபடி மக்கள் சபைக்கும், மாநில சட்டசபைகளுக்குமான பொதுத் தேர்தல்கள், 1957-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்ய வேண்டிய மார்ச்சு மாதத்திற்குள் முடிவடைந்துவிடும் என்று தெரியவருகிறது.

1956-ம் ஆண்டு இறுதியில் நடைபெற வேண்டிய தேர்தல்களுக்கான ஏற்பாடுகள் பற்றி ஆலோசிப்பதற்காக பிரதம தேர்தல் கமிஷனரான எஸ். சென் என்பார், வரும் மே 9-ந் தேதியன்று ஸ்ரீநகரில் மாநில தேர்தல் அதிகாரிகளின் மாநாடு ஒன்றினைக் கூட்ட இருப்பதாகத் தெரிகிறது.

சென்ற 1951-52 தேர்தல்களைப் போல், ‘ஆறு மாதம் வரை,’ என்று மாதக்கணக்கில் இல்லாமல் இந்தியா முழுவதும் ஏககாலத்தில் சில வாரங்களுக்குள்ளாகவே தேர்தல்கள் நடைபெற்று முடிவுறுமாறு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரியவருகிறது.

சென்ற பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கையின் துணைகொண்டு, வரப்போகும் தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் நடைமுறைகள் வகுக்கப்படும் என்று தெரியவந்துள்ளது.

தொழிலாளர்களுக்கான இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழ், நோய், பிரசவ கால உதவி, உறுப்புகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி, தொழிலாளரின் குடும்பத்தினருக்கு உதவி ஆகியவற்றிற்காக, 1953—54-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 19,23,167 பட்டுவாடா செய்யப்பட்டதாகவும், மருத்துவ வசதிகளுக்காக மொத்தம் ரூ. 11,28,611 செலவழிக்கப்பட்டதென்றும் டில்லி மேல் சபையில் அறிவிக்கப்பட்டது.

திட்டம் அமுல் நடத்தப்பட்டு வரும் பிரதேசங்களைச் சேர்ந்த முதலாளிகள், பரிசீலனைக் காலத்தில் மொத்தம் ரூ. 15,15,940 செலுத்தியுள்ளனர் என்றும், இதர பிரதேசங்களிலுள்ள முதலாளிகள் மொத்தம் ரூ 1,61,27,644 செலுத்தியுள்ளனரென்றும் அறிவிக்கப்பட்டது.

மயானத்திலும் வேறுபாடா?

சென்னை சர்க்கார் உத்திரவு

திருச்சி, ஏப் 16—

மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளபடி, பலதிறப்பட்ட வகுப்பு மக்களுக்கென வெவ்வேறாக உள்ள தனிப்பட்ட மயானங்களை எடுத்துவிட்டு, எல்லோருக்கும் பொதுப்படையான ஒரே மயானமாக ஏற்படுத்தலாமா என்பது பற்றி விசாரித்து எழுதுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சென்னை அரசாங்கம் உத்திரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

கைத்தறி அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவி

ரூ. 8 கோடி கிடைக்கும்?

பம்பாய், ஏப். 16—

நடப்பு நிதி ஆண்டில் கைத்தறி அபிவிருத்தித் திட்டத்திற்கு நிதி உதவி அளிப்பதற்கு மாநில சர்க்கார்களுக்கு ரூ. 8 கோடி கிடைக்குமென்று அகில இந்திய கைத்தறிக் குழுத் தலைவர் நஞ்சப்பா தெரிவித்திருக்கிறார்.

இவ்வாண்டில் கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக மத்திய சர்க்கார் ரூ. 5 கோடி அளிக்க ஒப்புதல் தந்துள்ளதாகவும், சென்ற ஆண்டில் வழங்கப்பட்ட மானியத தொகையான ரூ. 6.45 கோடியில் செலவு செய்யப்படாமல் இருக்கும் மீதித் தொகையை இவ்வாண்டு கைத்தறி அபிவிருத்தித் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும், 12 மாநில சர்க்கார்கள் தெரிவித்துள்ள புள்ளி விபரங்களிலிருந்து இவ்வாண்டு மார்ச்சு திங்கள் இறுதிவரை இதற்கென செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூ. 2.57 கோடி என கணக்கிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மக்கள் தாராளமாகப் பணம் தந்தால்......

மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரியாம்!

சென்னை, ஏப். 16—

ஏராளமான பல மருத்துவக் கல்லூரிகளை மாவட்டத்திற்கு ஒன்று வீதம்கூடத் திறக்க முடியும்; ஆனால் எப்படித் தெரியுமா? ‘அத்தைக்கு மீசை முளைத்தால்’ என்பது போல!

தங்களின் வடநாட்டு எஜமானர்கள் பணம் தந்து, அத்துடன் இந்த நாட்டிலிருக்கும் பெருந்தனவான்கள் பெருமனதுடன் பெருந்தொகைகளை நன்கொடையாகத் தந்து, சர்க்காரிடம் பணம் குவிந்தால் ஏராளமாகக் கல்லூரிகள் திறக்கப்பட முடியும் என்று கூறுகிறார் மந்திரியார்.

‘போர் குழு, மதுரை, கோவை, கோழிக்கோடு ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரிகள் திறக்கலாம் என ஆலோசனை கூறியுள்ளது; மதுரையில் ஏற்கனவே ஒரு மருத்துவக் கல்லூரி உள்ளது; காரைக்குடி, கோவை பகுதி மக்கள் தங்கள் தங்கள் ஊரில் மருத்துவக் கல்லூரிகள் தேவை என ‘கிளர்ச்சி’ செய்து வருகின்றனர்.

இலட்சுமணசுவாமி குழுவின் அறிக்கையில் காரைக்குடி அல்லது தஞ்சை ஏதாவது ஒரு இடத்தில் மருத்துவக் கல்லூரி துவங்கலாமென யோசனை கூறப்பட்டிருக்கிறது. இதுபற்றி இன்னும் சர்க்கார் முடிவேதுமெடுக்கவில்லை.

இத்தகவல்களை எல்லாம் சென்னை சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி, பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

“ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரி இருக்கவேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில், திருநெல்வேலி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்று துவக்கப்படுமா?” என்று கேட்கப்பட்டபோது, “அம்மாதிரி மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி வேண்டுமானால்; மக்கள், தாராளமாகப் பணம் நன்கொடை தரவேண்டும்,” என்று கூறியுள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

முதல் முயற்சி!

மாநில மாநாட்டிற்காக தி. மு கழகம் 25 ஆயிரம் ரூபாய் பணம் திரட்டுவது என்ற பேரூர் தீர்மானத்தின் படி, சென்னையில், ஏப்ரல் 24-ந் தேதி மாலை, சென்னை, வண்ணாரப்பேட்டை, தியாகராயர் கல்லூரியில்,

புரட்சி நடிகர்,

M. G. இராமச்சந்திரன்

அவர்கள்

‘ஆசை நினைவு’

எனும் நாடகத்தை நடத்தித் தர இசைந்துள்ளார்கள் என்பதைப் பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறோம். மாநில மாநாட்டுக்கு நிதி திரட்டும் முதல் முயற்சி இது; முதல் முயற்சி, நமக்கெல்லாம் பெருமை தரத்தக்கதாக, வெற்றிகரமாக அமைதல் வேண்டும்.

முதல் முயற்சியின் வெற்றியின் துணை கொண்டுதான், தொடர்ந்து பல காரியங்கள் நடந்தேற வேண்டியிருக்கிறது.

சென்னைத் தோழர்களிடம், முதல் முயற்சி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

பெருமைப்படத்தக்க விதமான வெற்றியைத் தேடித் தரும் பெரும் பொறுப்பு சென்னைத் தோழர்களுக்கு!

சென்னைத் தோழர்கள், வெற்றியைத் தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கை நமக்கெங்கும் இருக்கிறது!

தோழர்களே! இன்றிலிருந்தே பணியாற்ற வாருங்கள்!!

முதல் முயற்சி—ஏப்ரல் 24-ல்!

[குறிப்பு:—சென்னை 8—4—55 ‘நம் நாடு’ இதழில் வெளியிடப் பெற்ற ‘முதல் முயற்சி’ அறிவிப்பில் கண்டுள்ளபடி தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் ‘பகைவனின் காதலி’ நாடகம் நடைபெறும், என்றிருப்பதற்குப் பதிலாக ‘ஆசை நினைவு’ நாடகம் என மாற்றிப் படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.—ஆ-ர்.]

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திரு-கொச்சி சர்க்காருக்கு ஆண்டுதோறும் 2 கோடி ரூபாய் நஷ்டம்?

உணவுப் பொருள் மானியத் தொகை வழங்குவதால் ஏற்படுகிறதாம்

திருவனந்தபுரம்—

உணவுக் கட்டுப்பாடுகள் ஒழிக்கப்பட்டதிலிருந்து உணவுப் பொருள்களுக்கு மானியத் தொகை வழங்கும் வகையில், மாநில அரசாங்கம் ஆண்டுதோறும் ரூ. 2 கோடி நஷ்டமடைந்து வருவதாக திரு-கொச்சி சட்டசபையில் ரெவினியூ மந்திரி ஏ. ஜே ஜான் கூறியிருக்கிறார்.

கட்டுப்பாடுகள் ஒழிக்கப்பட்டுவிட்டால், உணவு இலாகாவும் சீக்கிரமே ஒழிக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

உணவுக் கட்டுப்பாடு அமுல் இலாகா ஒழிக்கப்பட்டதினால் பலர் வேலை இழந்தனர் என்றும், ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் வேறு பல சர்க்கார் இலாகாக்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்றும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

ஆதிக்கநிழல்படருகிறதா?

இந்தியாவிற்கு ரூ. 125 கோடி வரை அமெரிக்கா உதவியுள்ளதாம்

இந்தியா 98,200 டன் உருக்கிரும்பு வாங்குவதற்கு அமெரிக்கா 1,18,00,000 டாலர் (ரூ 5,60,50,000) கொடுத்து உதவுவதென அண்மையில் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

“இத்தொகை இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் மிகவும் அவசியமாகும்; இதனால் இந்தியர் பலருக்கு வேலை கிடைக்கும்,” என்று மத்திய அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

“உருக்கிரும்பு இந்தியாவில் இறக்குமதியானால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி இன்னும் ஏற்பட வேண்டிய தொழில் முன்னேற்றத்துக்கும், விவசாய முன்னேற்றத்துக்கும் உதவியாக இருக்கும்; இத்துறையில் அதிகமாக மூலதனம் போடுவதற்கும் ஊக்கமளிக்கும்,” என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க வெளிநாட்டு உதவி நிர்வாகத்தின் மூலமாய் இத்தொகை இந்தியாவுக்கு வழங்கப்படுகிறது. 1955-ம் நிதி ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையாகிய ரூ. 35,91,00,000ல் இது ஒரு பகுதி.

(இந்திய-அமெரிக்க ஒத்துழைப்புத் திட்டம் 1952 ஜனவரியில் ஆரம்பமாயிற்று; அது முதல் இதுவரை பொருளாதார அபிவிருத்திக்காகவும், தொழில் நுட்ப முன்னேற்றத்திற்காகவும் அமெரிக்கக் காங்கிரஸ் இந்தியாவுக்குக் கொடுத்துள்ள தொகை ரூ. 123,55,00,000 ஆகும்.)

இறக்குமதியாகும் 98,200 டன் உருக்கிரும்பு, ரயில்வேக்களுக்கும், குழாய்க் கிணறு திட்டங்களையொட்டி கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதற்கும், வேறு முன்னேற்றத் திட்டங்கள் பலவற்றிற்கும் பயன்படுத்தப்படும்.

இந்தியாவுக்கு 23,00,000 டன் உருக்கிரும்பு தேவை; ஆனால், இந்தியாவில் கிடைப்பதோ 11,00,000 டன்தான்; எனவே, 12,00,000 டன் உருக்கிரும்பு அதிகமாக இறக்குமதி செய்ய வேண்டும். இல்லாவிட்டால், ஐந்தாண்டுத் திட்டத்தின்படி ஆக வேண்டிய வேலையைச் செய்து முடிக்க முடியாது. இந்நிலையில் வெளியேயிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய உருக்கிரும்பு முழுவதையும் அமெரிக்கா கொடுக்காவிட்டாலும், அமெரிக்கா கொடுக்கும் 98,200 டன் உருக்கிரும்பு மிகவும் பயன்படும்.

சென்ற ஆண்டில், அமெரிக்கா ஏறக்குறைய 2,05,000 டன் உருக்கிரும்பு இந்தியாவுக்குக் கொடுத்தது. அது 255000 டாலர் மதிப்புள்ளது:

அதுவுமன்றி, முன்னைய ஆண்டுகளில் செய்துள்ள மற்றைய ஒப்பந்தங்களின்படி விவசாய அபிவிருத்திக்காக 1,35,000 உருக்கிரும்பு அமெரிக்கா கொடுத்திருக்கிறது. அந்த இரும்பு விவசாயக் கருவிகள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆப்கன் கோரிக்கை: ரஷ்யா ஆதரவு?

ஆக்கிரமிப்பு நேரிட்டால் இராணுவ உதவி அளிக்குமாம்!

‘பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை மாநிலம் அந்நாட்டிலேயே சேரவேண்டுமா—அல்லது ஆப்கானிஸ்தானத்தில் சேரவேண்டுமா என்பதை அந்த மாநில மக்களின் முடிவுக்கே விட்டுவிட வேண்டும்’ என்ற ஆப்கன் சர்க்காரின் கோரிக்கைக்கு சோவியத் ரஷ்யாவின் ஆதரவு கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தக் கோரிக்கையின் விளைவாக பாகிஸ்தானோ அல்லது அதன் மற்ற இராணுவக் கூட்டுநாடுகளோ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்கினால் சோவியத்தின் இராணுவ உதவி ஆப்கானிஸ்தானத்திற்கு கிடைக்குமென்று கூறப்படுகிறது.

கிராமப் பகுதிகளுக்குக் கடன் வசதி

அமைச்சர் தரும் எச்சரிக்கை

“கிராமாந்திரங்களில் கடன் பண வசதி அளிப்பதையும், பண்டங்கள் விற்பதையும், இனிமேலும் தனிப்பட்டோர் கையில்விட்டு வைப்பது மிகவும் ஆபத்தானது; இது உற்பத்தி மேலும் மேலும் உயர்யாகி, அதனால் விலைவாசிகள் சரிந்துகொண்டேவரும் இக்காலத்தில் மிகவும் பேராபத்தானது.”

இவ்வாறு, மத்திய சர்க்கார் உணவு அமைச்சர் அஜித்பிரசாத் ஜெயின், புதுடில்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர், இந்தியாவில் ஆண்டுதோறும் நீண்டகால கடனாகவும், நடு, குறுகிய காலத் தவணைகளிலும் ரூ. 750 கோடி வாங்குகிறார்களென்றும், இதில் சர்க்கார், கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக பாங்கிகள் கொடுக்கும் கடன் 7.3 சத விகிதம்தான் என்றும் தெரிவித்தார். மீதமுள்ளதில் பெரும்பகுதியை வட்டிக்கடைக்காரர்கள்தான் கொடுத்து வருகின்றனர் என்றார்.

மறைவு

நெல்லை தி. மு. கழக மாவட்டக் குழு உறுப்பினரும், பாளையங்கோட்டை மணி மார்க் பொட்டு வெடிக் கம்பெனியின் பங்குதாரருமான தோழர் எ. தங்கையா அவர்களது சகோதரர் செல்லத்துரை அவர்களுடைய 1½ வயதுப் பெண் குழந்தை இந்திராணி 3 நாட்களாக கோய்வாய்ப்பட்டு, 2—4—55-ல் இயற்கையெய்தினாள்.

இது குறித்து ‘நம் நாடு’க்கு ரூ. 2 அனுப்பப்பட்டது — பெற்றுக்கொண்டோம் — நன்றி — பொறுப்பாளர்.

சாய்க்கப்படவில்லை—ஏகாதிபத்திய முறை!

ஏமாறக் கூடாது—பகைவனின் மாற்று வேடம் கண்டு

ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் சுகர்ணோ

"'காலனி முறை' என்பது மிகமிக சாமர்த்தியம் கொண்ட முறை; உறுதியுடன் தந்திரமும் படைத்த ஒரு பகைவன்; பல்வேறு சமயங்களில்—தான் நினைத்தபோதெல்லாம்—நிலைமைக் கேற்றவாறு அந்தப் பகைவன் தனது சுய உருவை மறைத்து மாறுவேடத்தில் தோன்றுவான். அப்படிப்பட்ட பகைவனை நாம் பூண்டோடு அழிக்கவேண்டும்—வேரோடு வெட்டியெறிய வேண்டும்; உலகின் எந்தப் பகுதியிலும் அவனை உலவ விடாதபடி உருக்குலைக்க வேண்டும்."

—இவ்வாறு, ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் இந்தோனேஷியத் தலைவர் டாக்டர் சுகர்ணோ குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"சுதந்திரம், சகிப்புத்தன்மை, சமாதானம் ஆகிய கொள்கைகளைப் பேணி வளர்ப்பதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கம்; 'நாமும் வாழ்வோம்—பிறரையும் வாழவிடுவோம்; வேற்றுமையுள் ஒற்றுமையினைக் காண்போம்,' என்ற கொள்கையைக் கடைபிடிப்போம்; இந்த இலட்சியத்தை நாம் உறுதியுடன் கடைபிடிப்போமாயின், அதனால் மகத்துவமும், செயல்திறமும் உலக முழுமையிலும் ஒரு செல்வாக்கை உண்டுபண்ணும். இந்த இலட்சியத்தைக் கடைபிடிப்பதில் நாம் தவறுவோமாயின், எந்த ஒரு 'சமரச ஒளி'யை எல்லாத் தத்துவங்களும் கூறுகின்றனவோ அந்த 'ஒளி'யை மனிதன் பெறமுடியாதபடி உலகை இருள் கவ்விக் கொள்ளும்.

"காலனி முறை நீடித்துக் கொண்டு செல்லும் காலம் வரையிலும் மனித வர்க்கத்தின் முழு கௌரவமும் வளர்ச்சியில்லாமல்—ஆழ்த்தப்பட்டதாகவேதான் கருத முடியும்; முன்னாட்களில் நடைபெற்றவைகளைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. ஆனால், அதே நேரத்தில், 'இனி மேலும் அந்த உலகில் நீடிக்கப்படக் கூடாது,' என்பதிலே நாம் மிகவும் உறுதி பூண்டிருக்க வேண்டும்.

"'காலனி முறை ஒழிந்துவிட்டது' என்று ஒரு சிலர் பசப்பு வார்த்தைகள் மொழிகின்றனர்; அவை வெறும் ஏமாற்று வார்த்தைகள் — அறிவை அடகுக்கு வாங்கும் ஏமாற்றுவித்தை; இந்த ஏமாற்றுவித்தையால் நாம் நமது சுயஉணர்வை இழந்து ஏமாறி விடக்கூடாது.

"காலனி முறை இன்னும் ஒழியவில்லை— ஒழிக்கப்படவில்லை ஆசியாவில், ஆப்பிரிக்காவில் பல பகுதிகள் காலனி ஆதிக்கத்தின் கீழ் அகப்பட்டு அவதியுறுகின்றன; அந்தக் காலனி ஆதிக்கத்தின் 'இராஜ பாட்டை'யானது, ஜிப்ரால்டர், சூயஸ் கால்வாய், செங்கடல், இந்து மகா சமுத்திரம், சீன, ஜப்பானியக் கடல் ஆகியவைகள் மூலம் உலகையே வளைத்துக் கொண்டிருக்கிறது. பல இடங்கள், அந்த ஏகாதிபத்திய ஆதிக்கத்தினின்றும்—மனிதவர்க்க உரிமைகளை பறித்து மனிதரை மாக்களாக கருதிவந்த காலனி ஆதிக்கத்திடம்—போராடி, தங்களை விடுவித்துக் கொண்டுள்ளன; ஆயினும், 'ஏகாதிபத்திய முறை வேரோடு சாய்ந்தது,' என்று கூறிவிட முடியாது,"

'ஆகாய இரயில்' அமைக்க உதவி

சிக்கிமில் 'ஆகாய இரயில்' அமைப்பதற்கென இந்திய சர்க்கார் ரூ. 21 லட்சம் கடனாகத் தர இருக்கிறது இந்தத் தொகை தவிர, மேற்கொண்டும் ரூ. 9,75,000 தர இருக்கிறது; இந்தக் கடன் தொகையை 15 ஆண்டுகாலத் தவணைகளில், ஆண்டொன்றுக்கு ரூ. 2 லட்சம் வீதம் இந்திய சர்க்கார் திரும்பிப் பெறுமாம்.

கடன் தொகை உள்பட, இந்திய சர்க்கார், இவ்வாண்டில் மொத்தம் ரூ. 55 லட்சம் சிக்கிமிற்கும், ரூ. 1,66,31,000 நேபாளத்திற்கும் தருமாம்.

★★★★★★ ★★★★:★★★★★★★

தி. மு. கழகப் பொதுக்குழு

24—4—55ல் சென்னை வண்ணாரப்பேட்டை தியாகராயர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழகப் பொதுக் குழுவிற்கான ஏற்பாடுகளை சென்னை மாவட்ட தி. மு. கழகம் சிறப்புற கவனித்து வருகிறது.

வெளியூர்களிலிருந்து வரும் பொதுக் குழு உறுப்பினர்களை வரவேற்க சென்னையின் இருமுக்கிய (சென்ட்ரல் எழும்பூர்) புகைவண்டி நிலையங்களிலும் 24—4—55 காலை முதல் கழகச் சின்னம் அணிந்த தொண்டர்கள் அணிவகுத்து நிற்பர். வெளியூர் பொதுக் குழு உறுப்பினர்கள் கழகத் தொண்டர்களின் வாயிலாக தியாகராயர் கல்லூரியை அடைவதற்கான வழியையும், வசதியையும் பெற்றுக் கொள்ளலாம்.

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

★:★★★★★:★★★★★:★★★★★★

விடுதலைக்குவித்திடுவோம்-காலனி ஆதிக்கம் ஒழிப்போம்

இன வேற்றுமை—இருண்ட காலக் கொள்கையாகும்

ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் ஜோஜோ முழக்கம்

"காலனி ஆதிக்கம் நடத்தும் வல்லரசுகள், தமது நல்லெண்ணத்தைப் பற்றி இடையிடையே பேசக் கேட்டிருக்கிறோம். ஆனால் நல்லெண்ணமும்—'நல்லது செய்ய வேண்டும்' என்ற உத்தேசம் மட்டும் அவர்களிடையே இருந்துவிடுவதில் எவ்விதப் பிரயோசனமுமில்லை; அந்த வல்லரசுகள் தங்கள் நல்லெண்ணத்திற்கு எடுத்துக்காட்டாக என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபடப் போகிறார்கள் என்பதைக் கணித்துத்தான், அவர்கள் இந்த உத்தேசத்தை அந்தரங்கமான உள்ள உணர்வுடன் கூறுகிறார்களா அல்லது வெறும் வெளிப்பகட்டிற்காகப் பேசுகிறார்களா என்பதை மதிப்பிட முடியும்."

—இவ்வாறு பாண்டுங்கில் நடைபெறும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசிய இந்தோனேஷியப் பிரதமர் அலி சஸ்திரோமித்ஜோஜோ கூறினார்.

அவர் தொடர்ந்து பேசினார்:—

"காலனி நாடுகளில்—பிறர் ஆதிக்கத்தின் கையிலகப்பட்டுக் கிடக்கும் நாடுகளில் வசிப்போர் நமது உடன்பிறந்த சகோதரர்கள்; அவர்களில் யாரையும் அழைக்காமலேயே அவர்களது வருங்காலத்தைப் பற்றி விவாதிக்கிறோமே என்று யாரும் மனவருத்தம் கொள்ளலாகாது; 'சுதந்திரம் பெற்ற நாடுகளை மட்டும்தான் அழைப்பது' என்று இம்மாநாட்டுக்கு வரம்பொன்று கட்டிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதால்தான், அவர்களை யெல்லாம் அழைக்க இயலாது போயிற்று.

"சுதந்திர நாடுகளின் பிரதிநிதிகளாக இங்கு கூடியிருக்கிற நாம், நமது சகோதரர்கள்—காலனி ஆதிக்கத்தின் கைப்பிடியில் சிக்குண்டு அலைக்கழிந்து வரும் நமது உறவினர்கள் — தங்களைக் கட்டிப் போட்டிருக்கும் காலனி ஆதிக்கத்தினின்றும் தங்களை விடுவித்துக் கொள்ள நடத்தும் எந்த அமைதியான போராட்டத்திற்கும் நம்மாலியன்ற முழு ஆதரவையும் தரவேண்டும்."

இன வேற்றுமை—இருண்ட உலகிற்குத்தான் பொருந்தும்

"காலனி ஆதிக்கத்தின் மற்றொரு உறுப்பே இனவேற்றுமையாகும். ஐ. நா. சாசனத்தில் கூறியுள்ளபடி, நிற வித்தியாசம் காரணமாக வேற்றுமை மனப்பான்மையை வெளிக் காட்டுவது மனித வர்க்கத்தின் சமத்துவத்திற்கு—அத்தியாவசியமான மனித வர்க்கத்தின் உரிமைக்கு முரண்பட்ட ஒன்றாகும். ஆனால் நாமோ, இன்றைய உலகில் மனித வர்க்கத்தின் சமத்துவத்திற்கும், மனித உரிமைக்கும் வெகு அப்பாற்பட்ட தொலைவிலேயே நிற்கிறோம். இன ஒதுக்கல் கொள்கை — நிறவேற்றுமை இருண்ட உலகிற்குத்தான் பொருந்தும்—நவீன நாகரீக இக்காலத்திற்கு ஒவ்வாததாகும்.

அணு யுகத்தின் வாயிலில் அடியெடுத்து வைப்போம்

"இப்போது நாம் புதிய நூற்றாண்டின் வாயிலில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறோம்; அந்த வாயிலில் நின்றுகொண்டு, அணுகுண்டு, நீர்வளிக்குண்டுகளின் விளைவுகளை எதிர்நோக்கிக் கொண்டேதான் நிற்கிறோம்.

"புதிய உணர்ச்சியுடனும், புதுக் கொள்கைகளுடனும், அகில உலக தார்மீக உணர்ச்சியுடனும் அணுயுகமாகிய நூற்றாண்டின் பிறப்பை நாம் எதிர்பார்த்து நிற்கவேண்டும். இந்தப் பண்புகளே உலகெங்கிலுமுள்ள நாடுகளிடையே சகோதரத்துவ உணர்ச்சிக்கும், சமாதானக் கொள்கைக்கும் அடிப்படையாக அமையவேண்டும்."

இவ்வாறு கூறிய அவர், இறுதியாக, 'உலக நாடுகளிடையே பரஸ்பரமாக நிலவி வரும் மனத்தாங்கல்களையும், பூசல்களையும் தணிப்பதுதான் மாநாடு கூட்டப்பட்டதின் நோக்கம்' என்று கூறினார்.

1954-ம் ஆண்டில், இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு மொத்தம் 3,21,60,000 பவுண்டு தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

பம்பாயில் 10,000 பஸ், டிராம் தொழிலாளர் வேலை நிறுத்தம்

போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

பலருக்குக் காயம்; 100 பேர் கைது

பம்பாய், ஏப். 18—

பம்பாய் மின்சார சப்ளை 'டிராம்' சர்வீசைச் சேர்ந்த பஸ்—டிராம்—தொழிலாளர்கள் சுமார் 10,000 பேர் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்கள்மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

கம்யூனிஸ்டுகளின் தலைமையின் கீழிருக்கும் அந்தத் தொழிலாளர் சங்கம், சில தொழிலாளர்களைப் பழி வாங்கியதாகவும், வேலைப் பளு அதிகப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறி அதை எதிர்க்க ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யுமாறு தொழிலாளர்களைக் கோரியிருந்தது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், பம்பாய் பரேல் பகுதியில் உள்ள கம்கார் மைதானத்தில் கூட்டம் கூட எத்தனித்தனராம்.

தடையுத்தரவினைக் காட்டி கூட்டம் கூடுவதை அனுமதிக்க மறுத்திருக்கின்றனர் போலீசார்.

கலைந்து சென்ற தொழிலாளர்கள் சாலை ஓரங்களில் கூட்டம் கூட்டமாகக் கூடி நின்று, ஓடிக்கொண்டிருக்கும் பஸ், டிராம் போக்குவரத்துக்களைத் தடுத்து நிறுத்துதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டனராம்.

தொழிலாளர்கள் பலாத்காரச் செயல்களில் ஈடுபடுவதாகக் கூறி போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

இதனால் இருவர் காயம்பட்டனர் என்றும், தொழிலாளர்களின் கல்வீச்சு போன்ற செயல்களினால், போலீசாரில் பலருக்கு சிறு சிறு காயங்கள் ஏற்பட்டன என்றும் கூறப்படுகிறது.

மொத்தமுள்ள 12,000 தொழிலாளர்களில் 10,000 பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்று தொழிற் சங்கம் கூறுகிறது.

ஆனால் நிர்வாகிகளோ, 30 சதவிகிதத்தினர் மட்டுமே வேலை நிறுத்தத்தில் பங்கு பெற்றதாகக் கூறுகின்றனர்.

தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களில் 100 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டுள்ளதாயும், பலர் துப்பாக்கி முனையில் வேலைக்குச் செல்லுமாறு அச்சுறுத்தப்பட்டதாயும் அறிக்கைகள் விடுத்துள்ளனர்.

தொழிலாளர்களின் செயல்களால் பஸ்களின் கண்ணாடிகள் ஜன்னல்கள் எல்லாம் உடைபட்டன என்றாலும் அதிகமான சேதமேதுமில்லை என்று கூறப்படுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

அம்மாப்பேட்டை (தஞ்சை)

பெரிய வீரப்ப செட்டித் தெருவில் 21—4—55 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

என். வி. நடராசன்
ப. நாராயணசாமி
ந. தர்மலிங்கம்

★

வெங்கிடங்கால்

20—4—55 மாலை 6 மணிக்கு நடைபெறும் தோழர்கள் சி. ஜம்பு, என். கிட்டப்பா, கே. எஸ். சௌந்தரராசன் ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

20—4—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் எம். மோகன் தலைமையில், 'கடமை' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

ஐக்கிய கடலார் சம்மேளனம் திறப்பு விழா

20—4—55 மாலை 6 மணிக்கு, சென்னை, இராயபுரம் (பனைமரத் தொட்டி) அம்மன் கோவில் தெருவில், தோழர் என் ஜீவரத்தினம் தலைமையில் நடைபெறும். திரு எஸ். எஸ். ராமசாமி படையாச்சி சம்மேளனத்தைத் திறந்து வைப்பார். திருவாளர்கள் சி. ஆர். கிருஷ்ணன், ஏ. கஜபதி, எம் எல். சி. அல்லா பிச்சை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த தின விழா

21—4—55 மாலை 6 மணிக்கு, பூவிருந்தவல்லி, ஆஞ்சநேயர் கோவில் தெருவில், தோழர் கே. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், எஸ். எஸ் தென்னரசு, தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

திருமணம்

20—4—55 இரவு 10 மணிக்கு, ஏர்வாடி, (நெல்லை மாவட்டம்) எண் 43, 6-வது தெருவில், தோழர் பி. மு. அலியார்—தோழியர் ஆயிசா திருமணம் நடைபெறும்.

க்ஷய நோய் பீடித்த சர்க்கார் ஊழியர்கள்

சென்னை சர்க்கார் முடிவு

க்ஷயரோக நோயினால் பீடிக்கப்பட்ட சர்க்கார் ஊழியர்கள், தங்கள் நோய் நீங்கப்பெற்று, 'உத்தியோகத்திற்கு இலாயக்கானவர்தான்' என்று அங்கீகரிக்கப்பட்ட க்ஷயரோக நிபுணரிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் பெற்றால், அப்படிப்பட்டவர்களை மீண்டும் வேலையில் அமர்த்திக் கொள்ளலாமென்று சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனராம்.

அந்நிய மாணவர்களுக்கு இந்திய சர்க்கார் செலவு

'நடை முதல் வரவு-செலவுத் திட்ட ஆண்டில், இந்தியாவிலுள்ள அந்நிய நாட்டு மாணவர்களுக்கு ரூ. 14,10,808 செலவிட இந்திய சர்க்கார் உத்தேசித்துள்ளது,' என்று டெல்லி மேல் சபையில் தகவல் தரப்படுகிறது.

விஞ்ஞான மேதை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஜெர்மானிய நாட்டில் பிறந்த இவர் யூத வகுப்பைச் சேர்ந்தவர்.

ஜெர்மனி, இவருக்கு மாபெரும் பாராட்டையும், புகழையும் தரக் காத்துக் கொண்டிருந்தது; ஆனால், இட்லரின் 'யூத ஒழிப்புக் கொள்கை,' ஐன்ஸ்டினையும், நாடு கடந்து, அமெரிக்காவில் தஞ்சம் புகுந்து வாழச் செய்த ஓர் பாழும் நிலையை உண்டாக்கிற்று.

அமெரிக்காவிலிருந்த காலத்திலேயே இவர் மிகப் பெரும் விஞ்ஞான வித்தகர் என்பது எல்லா வகையாலும் நிரூபணமாயிற்று.

இவரது மறைவு குறித்து உலகெங்குமுள்ள பெரும் விஞ்ஞானிகளெல்லாரும் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.